# Feminism from the Perspective of Thiru. V. Kalyanasundaranar

**Dr. A. Annamary**
*Assistant Professor*
*St. Vallanar College of Arts and Science (Autonomous), Cuddalore*

**Abstract**
*The well-being of a nation largely depends on the status of its women. Equality between men and women should be maintained, with appropriate discipline, restraint, education, and training being vital for both genders. Women must be protected in the same way as men. Only by safeguarding them can a prosperous society be achieved. A nation's prosperity relies on having virtuous citizens. Women who bear and nurture children should be raised as exemplary individuals, and from a young age, they should receive proper training and protection. This essay, titled 'Protection of Womanhood' from the perspective of Mr. V.K., discusses and emphasizes the importance of safeguarding women.*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: அக்டோபர்

வருடம்: 2025

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346690

**References**

1. A. Jegatheesan, Human Rights Thought in Tamil Literature, p. 106.
2. Thiru. V. Kalyanasundaranar, The Greatness of Women, p. 12.
3. Ibid., p. 18.
4. Ibid., p. 49.
5. Ibid., p. 65.
6. M. Narayana Velu Pillai, Thirukkural, Verse 391.
7. Thiru. V. Kalyanasundaranar, The Greatness of Women, p. 67.
8. Ibid., p. 68.
9. Ibid., p. 69.
10. M. Narayana Velu Pillai, Thirukkural, Verse 54.
11. Thiru. V. Kalyanasundaranar, The Greatness of Women, p. 74.
12. M. Narayana Velu Pillai, Thirukkural, Verse 298.
13. Thiru. V. Kalyanasundaranar, The Greatness of Women, p. 84.

# திரு.வி.க.வின் பார்வையில் பெண்ணியம் காத்தல்

***முனைவர் அ. அன்னமேரி***
உதவிப் பேராசிரியர்
புனித வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்

***ஆய்வுச் சுருக்கம்***

*ஒரு நாட்டின் நலன் அந்நாட்டின் பெண் மக்கள் நிலையைப் பொருத்தே உள்ளது. ஆணும் பெண்ணும் சரி நிகர், ஒழுக்கம் கட்டுப்பாடு, கல்வி, கற்பு இவையாவும் ஆண் பெண் இருபாலருக்கும் அவசியம். ஆண்களைப் போன்று பெண்கள் நலன் பாதுகாக்கப் பட வேண்டும். அவ்வாறு பாதுகாக்கப்பட்டால் மட்டுமே நல்ல சமூகத்தை உருவாக்க முடியும். நல்ல குடிமக்களால் தான் நாடு நலம் பெறும். அம்மக்களைப் பெற்றெடுத்து வளர்க்கும் பெண் மக்கள் எத்தகைய சிறப்புடையவளாக வளர்த்தெடுக்கப் படவேண்டும், அவர்களுக்கு இளமை முதல் எத்தகைய பயிற்சி அளித்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை தெளிவுபடுத்தும் விதமாக திரு.வி.க.வின் பார்வையில் பெண்ணியம் காத்தல் என்ற தலைப்பில் இக்கட்டுரை ஆராய்ந்து அமைந்துள்ளது.*

## முன்னுரை

நமது நாட்டில் இடைக்காலத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட கட்டுப்பாடுகள் பெண்ணுலகிற்கு பெருங்கேடு சூழ்ந்தன. அக்கட்டுப்பாடுகளும் அடக்கு முறைகளும் பெண்ணினத்தை கல்லாய், மண்ணாய், நடைபினமாய் செய்துவிட்டன. அத்தகைய பெண்களின் நிலைக்கண்டு தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் பெண்மைகள் பெருமை பெற்றால் தான் நாடும் பெருமை பெறும். கல்வி, ஒழுக்கம், கற்பு, தூய்மை முதலிய பண்புகளுடன் வளர்த்தெடுக்கப்படுவதனால் அவளும், அவள் வாரிசும், அவள் சார்ந்த சமூதாயமும் மறுமலர்ச்சிக்காண முடியும் என்ற மனப்பாங்குடன் நல்ல பல வழிமுறைகளை எடுத்துக் கூறியுள்ளார். அவருடையப் பார்வையில் பெண்ணியம் காத்தல் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களின் எல்லாச்சிக்கல்களையும் புரிந்து கொண்டு அவற்றை நீக்க முயல்வதாகும். மேலும் உலகலாவிய அரசியல், பண்பாடு, பொருளாதாரம், ஆன்மீகம் ஆகியவற்றில் பெண்ணியத்தால் பெருத்தமாற்றத்தை உருவாக்க முடியும்[1] என்று கூறியுள்ளார் சார் லட்பன்ச்.

## பெண்மை

சிறு சிறு நீர் துளிகள் சேர்ந்து நீர்நிலைகள் ஆகுவது போல் பெண்கள் என்பவள்,

> **அடக்கம், பொறுமை, ஒப்புறவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை[2]**

எனப்படும். பல நற்குணங்களால் பிணைக்கப்பட்டவள் தான் பெண்மை என்பதை திரு.வி.க. குறிப்பிடுகிறார்.

## பெண்ணின் தியாகம்

பெண்கள் எப்பொழுதும் தனக்கென வாழாது பிறர்க்கென வாழக்கூடியவள். பலக் குடும்பங்களில் பெண்களுக்கு கணவனால் மற்றும் குடும்ப உறவுகளால் ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளைப் பொருத்துக் கொண்டு தங்கள் பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி வாழக்கூடிவள் என்பதை பின்வருமாறு சுட்டுகிறார்.

தனக்கென வாழாது, பின்னுல காக்கும் உயிர் கட்கென வாழ்தல், விருந்தோம்பல்,

ஏழைக்குதவுதல் முதலிய அருங்குணங்கள் பெண்ணிடத்துப் பொலிதல் வெள்ளிடை மலை[3] என்றும் அத்தகைய பெண்நலன் பாதுகாக்கப்பட வேண்டியது என்று குறிப்பிடுகிறார்.

### பெண்களுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள்

கட்டுப்பாடுகளும் விதிகளும் பெண்களுக்கு மட்டும் இல்லை. ஆண் பெண் இருபாலருக்கும் இருத்தல் வேண்டும்.

ஒருவன் பல பெண்களை மணக்கலாம் என்னும் விதி, பெண்ணுலகை இழிவுப் படுத்துவதாகும். பெண் தவறி நடந்தால் தண்டனை! ஆண் தவறி நடந்தாலோ தண்டனை இல்லை! இஃது அநீதி[4]

ஆகவே ஒரு பாதியுள்ள பெண்ணின் சிறுமை மற்றொரு பாதியுள்ள ஆணையும் தாக்கி முடிவில் வாழ்வையும், நாட்டையும் குலைக்கும் என்பதை ஆண்கள் புரிய வேண்டும் என்கிறார்.

### அறிவும் ஒழுக்கமும்

கல்வியால் பெறும் அறிவு மட்டும் ஒரு பெண்ணின் வாழ்விற்கு போதாது. அறிவுடன் ஒழுக்கமும் தேவை. ஒழுக்கமில்லாத வாழ்வு எத்தனையதாக இருந்தாலும் அதனால் வாழ்வின் நோக்கம் நிறைவேறாது என்கிறார். இதனை.

ஒழுக்கமில்லாப் பெண் பெண்ணல்லள் அவள் பேய். ஆதலால் தன்னைத் தெய்வமாக்கும் ஒழுக்கத்தை அளிக்க வல்ல கல்வியைப் பெண் இளமையிற் பெற்றுத்தரல் வேண்டும்[5] என்கிறார் திரு.வி.க. மேலும் திருவள்ளுவர்,

> **கற்க கசடறக் கற்பவை கற்றப்பின்**
> **நிற்க அதற்குத் தக[6]**

ஒருவர் கற்றதற் குரிய கல்வியை ஐயம் தெளிவுற்று கற்று அதன் வழியில் வாழ வேண்டும் என்கிறார்.

### போலி நாவல்கள் படிப்பதால் ஏற்படும் தீமை

தீய எண்ணங்களை உருவாக்க வல்ல போலி நாவல்களை, மற்றைய கதைகளை, இன்னும் பிறவற்றையும் கேட்கக் கூடாது, கையால் தொடவும் கூடாது. இவை இளம் பெண்கள் வாழ்வைக் கெடுத்து விடக் கூடும்.

அருமைக் குழந்தைகளே போலி நாவல்களை படியாதேயுங்கள், தொடாதேயுங்கள், உங்கள் வாழ்வு குலைந்து போகும். நோய் வாய்ப்பட்டு வருந்தி வருந்தி சாவீர்கள். கடவுள் உங்களை ஏன் உலகிற்கு அனுப்பினார். பிஞ்சில் பழுத்து உதிரவா?[7] என்று கூறி பெண்களின் வாழ்வை இளமையிலே பாதுகாக்க விழைகிறார்.

### பெண்ணிற்கு பல்கலையறிவு

பிள்ளைகளை நல்ல முறையில் வளர்த்தெடுக்க பல திறக்கல்வியைக் கற்றல் இன்றியமையாதது என்பதனை கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்.

> **பெண் கட்குபதார்த்த குணம் வைத்தியம், அரசியல், கணிதம் முதலிய கலைகளில் பொது அறிவு பெற்றிருக்க வேண்டும்[8]**

இல்லையேல் அவள் தாயாகி குழந்தைகளை வளர்த்தெடுப்பதில் சில சாவல்களை எதிர் கொள்ள வேண்டும் என்பதனை தெளிவுப்படுத்துகிறார்.

### கற்பு

பெண்கள் வாழ்வில் தவறுகள் ஏற்பட்டு கற்பை இழப்பதற்கு காரணம் கல்வி இன்மை. ஆகவே,

> **கல்வி பயின்று, உடலியல், உயிரியல், ஒழுக்கவியல், அன்பியல்[9]**

முதலியவற்றை உணர்ந்தால் மட்டுமே கனவில் கூட கற்பை பெண்கள் இழக்கமாட்டார்கள். பெண்ணிற்கு உள்ள பெருமையாண்டுள்ளது என்றால் கற்பில் என்றே எவறும் கூறுவர். இதனையே வள்ளுவர்,

**பெண்ணிற்கு பெருந்தக்கயாவுளகற் பென்னுள்**
**திண்மையுண்டாகப் பெறின்**[10]

கற்புடைய பெண் மனைவியாக வாய்த்தல் ஒருவனுக்கு சிறந்த பயன் என்கிறார்.

**சுகாதாரம்**

பெண்களுக்கு சுகாதாரம் குறித்த அறிவு இளமையிலேயே தேவை என்கிறார். சுகாதார முறைகளை ஆண் மக்கள் மட்டும் கவணிப்பதால் பயன் விளையாது. பெண்மக்களும் கவனிக்க வேண்டும்.

அவள் சுகாதார வாழ்வில் நிற்பாளாயின் அவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும் அவ்வழியில் பயிலும் ஆன்மாசார்ந்த தன் வண்ணமாகும் இயல்பினதன்றோ[11] என்கிறார் திரு.வி.க. இதனை வள்ளுவர்,

**புறந் தூய்மை நீரான் அமையும் அகத் தூய்மை**
**வாய்மையால் காணப்படும்**[12]

அகத்தூய்மைப் பற்றி கூறுவதற்கு முன்னரே புறந்தூய்மையின் நன்மைகளைப் பற்றி எடுத்துரைக்கிறார்.

**பொருந்தா உணவு**

பெண் மக்கள் அமைதியானவர்கள், அவர்கள் உண்ணக் கூடிய உணவும் அமைதி குலைப்பனவாக இருக்கக்கூடாது.

புளி, காரம், கலந்த பதார்த்தங்களும், அவை கலந்த ஊறுகாய்கள், புலால், காப்பி, தேயிலை, அமைதி குலைக்கும் மயக்கப் பொருட்கள் முதலியவற்றை உண்ணக் கூடாது.[13]

அவை உடல் நலனையும் கெடுக்கும் மனநலனையும் பாதிக்கும் என்கிறார்.

**முடிவுரை**

பெண்களைப் பாகுபடுத்திப் பார்க்கும் சமுதாய ஏற்றத் தாழ்வுகளினால் பெண்கள் எங்ஙனம் பாதிக்கப்படுகிறார்கள். இத்தகைய பெண்களின் நலன்கள் பாதுகாக்கப்படவும், அவர்களை வளர்த்தெடுப்பதில் ஏற்படும் சவால்களிலிருந்து மீட்டெடுக்கும் வழிகளை திரு.வி.க.வின் பார்வையில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**சான்றெண் விளக்கம்**

1. ஆ. ஜெகதீசன், தமிழ் இலக்கியத்தில் மனித உரிமைச் சிந்தனை, ப. 106.
2. திரு.வி. கலியாண சுந்தரனார், பெண்ணின் பெருமை, ப. 12.
3. மேலது., ப. 18.
4. மேலது., ப. 49.
5. மேலது., ப. 65.
6. எம். நாராயண வேலுப் பிள்ளை, திருக்குறள், 391.
7. திரு.வி. கலியாண சுந்தரனார், பெண்ணின் பெருமை, ப. 67.
8. மேலது., ப. 68.
9. மேலது., ப. 69.
10. எம். நாராயண வேலுப் பிள்ளை, திருக்குறள், 54.
11. திரு.வி. கலியாண சுந்தரனார், பெண்ணின் பெருமை, ப. 74.
12. எம். நாராயண வேலுப் பிள்ளை, திருக்குறள், 298.
13. திரு.வி. கலியாண சுந்தரனார், பெண்ணின் பெருமை, ப. 84.

**துணைநூற் பட்டியல்**


1. திரு.வி. கலியாண சுந்தரனார், கௌரா ஏஜென்ஸ், 10/14, தோப்புவேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.
2. திரு.வி. கலியாணசுந்தரனார், பெண்ணின் பெருமை, சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை-14.
3. எம். நாராயண வேலுப் பிள்ளை, திருக்குறள், நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, தியாகராயநகர், சென்னை.